


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் நேற்று முன்தினம் (3.9.2025) இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில், கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக எக்ஸிடெர் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, எக்ஸிடெர் பல்கலைக்கழகத்தின் தலைவர் மற்றும் துணை வேந்தர் ரிச்சர்ட் பொலட், உலகளாவிய ஈடுபாட்டு இயக்குநர் பீட்டர் கிளர்க் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் நேற்று முன்தினம் (3.9.2025) இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில், லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ் நிறுவனம் (SEASEARCHER) சென்னையில் அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் வகாஸ் சமது, முதன்மை நிதி அலுவலர் தாமஸ் ஆண்டனி ஸ்வைன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### புதுடெல்லியில் நடைபெற்ற

# சரக்குகள் - சேவைகள் வரி மன்றத்தின் 56 வது கூட்டத்தில் தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார்!

## தமிழ்நாடு அரசின் கருத்துகளை எடுத்துரைத்தார்!



புதுடெல்லி, செப். 5 -

புதுடெல்லியில் 3.9.2025 அன்று நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 56ஆவது கூட்டத்தில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு தமிழ்நாடு அரசின் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

தனிநபர் ஆயுள் காப்பீடு மற்றும் தனிநபர் மருத்துவக் காப்பீட்டு சேவைகளுக்கு வரிவிலக்கு உள்ளிட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சீரமைப்பு நடவடிக்கைகளை அமைச்சர் வரவேற்றார். அதே நேரத்தில், மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசியலமைப்பு திருத்தம் மூலம் தற்போதைய மேல்வரியை தொடரலாம் அல்லது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத் திருத்தம் மூலம் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு மட்டும் உச்ச வரிவரம்பினை அதிகரிக்கலாம் என்று அமைச்சர் பரிந்துரைத்தார்.

ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித்தீர்வு நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு, அலுவலர்கள் குழுவின் அறிக்கையை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். இக்குழுவின் பரிந்துரைகளை இவ்வருட டிசம்பர் மாத இறுதிக்குள் செயல்படுத்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஏற்றுமதி மற்றும் தலைகீழ் வரி அமைப்பின் (*Inverted Duty Structure*) கீழ் தற்காலிகமாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை திரும்பப் பெறுவதற்கான (*Provisional Refund*) தானியங்கி வழிமுறையினை அமைச்சர் வரவேற்றார். வணிகம் செய்வதை எளிமைப்படுத்துவதற்கான, சிறு இடர் அளவு கொண்ட வணிகங்களுக்கு எளிதாக்கப்பட்ட பதிவு முறையினை அமைச்சர் வரவேற்றார்.

உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்களுக்கு இழப்பீட்டு மேல்வரி விதிக்கும் காலத்தை அக்டோபர் முதல் 2 அல்லது 3 மாதங்களுக்கு நீட்டிக்க சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றம் பரிந்துரைத்துள்ளதால், தமிழ்நாடு அரசின் பரிந்துரைகளை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றம் பரிசீலிக்கும் என்று அமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

இக்கூட்டத்தில் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவ்னிட், வணிகவரி ஆணையர் எஸ். நாகராஜன் மற்றும் வணிகவரித் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கப்பலோட்டிய தமிழன்

# வ.உ.சிதம்பரனார் 154 வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்!

சென்னை, செப். 5 -

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 154வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், இன்று (5.9.2025) காலை 10 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

செக்கிழுத்த தியாகச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாதன் பிள்ளை பரமாயி அம்மையார் தம்பதியருக்கு 5.9.1872 அன்று மகனாகப் பிறந்தார்.

அடிப்படைக் கல்வியை ஒட்டப்பிடாரத்திலும், உயர்நிலைக் கல்விப் படிப்பைத் தூத்துக்குடியிலும், சட்டக் கல்வியைத் திருச்சியிலும் பயின்று வழக்குரைஞர் ஆனார். சமூக சேவையிலும் அரசியல் பணியிலும் படிப்படியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

தாய்நாட்டின் விடுதலைக்காகத் தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார்.

அரசியல் வாழ்க்கையில் பாலகங்காதர திலகரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்திட அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவும் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இதனாலேயே "கப்பலோட்டிய தமிழன்" எனப் பெயர் பெற்றார்.

வ.உ.சிதம்பரனாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் கோபமடைந்த ஆங்கிலேயர்களால், அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காகப் பொதுமக்களைத் தூண்டியதாகவும் இவர் மீது வழக்குப் பதிவு செய்து, இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக 1908ஆம் ஆண்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டுச் செக்கிழுக்க வைக்கப்பட்டார்.

தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும், தாய்மொழி தமிழ்மொழி மீது கொண்டிருந்த தணியாத பற்றின் காரணமாகப் பல அரிய நூல்களையும், சுயசரிதையையும் கவிதை வடிவில் எழுதியுள்ளார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், 1975 முதல் 1976 வரை தூத்துக்குடியில் கட்டிமுடிக்கப்பட்ட 4 கப்பல் தளங்களுக்குச் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் எழுதிய 16 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டன.

நம் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும், தாய் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும், நிறைந்துள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டின் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 154வது பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற உறுப்பினர், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

### இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செஞ்சி சிங்கவரம் ரங்கநாதர் கோவிலில்

# 5ஜோடிகளுக்கு இலவசத் திருமணம்-செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., நேரில் வாழ்த்து தெரிவித்து திருமண சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்!

செஞ்சி செப். 5-

தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் தமிழகம் முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு இடங்களில் இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுவருகிறது

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள சிங்கவரம் ரங்கநாதர் கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில்செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் 5ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

செஞ்சியை அடுத்த மலையரசன் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த ஜெய சூர்யா கெங்கவரம்ஷோபனா,காரை கிராமத்தைச் சேர்ந்த பாலமுருகன்,ஆர்த்தி, பொன்பத்தி பிரகாஷ் திண்டிவனம் கௌசல்யா,சிங்கவரம் பாலாஜி ஏதாநெமிலிபுவனேஸ்வரி,முருகன் தாங்கள் சஞ்சீவ் காந்திதாதங்குப்பம் பிருந்தா ஆகியோரது திருமணம்சிங்கவரம் ரங்கநாதர் திருக்கோவிலில்வேத மந்திரங்கள் முழங்க உறவினர்கள் முன்னிலையில்நடத்தி வைக்கப்பட்டு அவர்களுக்கு 4 கிராம் தங்கத் தாலி மற்றும் ரூ 70ஆயிரம் மதிப்புள்ள கட்டில் மெத்தை பீரோ உள்ளிட்ட சீர் வரிசைப் பொருட்களை மணமக்களுக்கு முன்னாள் அமைச்சர், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் வழங்கி மணமக்களை வாழ்த்தினார்

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,இந்து சமய அறநிலை துறை ஆய்வாளர் சங்கீதா,

முன்னாள் திண்டிவனம் நகர செயலாளர் கபிலன்,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் குணசேகரன், இளம் கீர்த்தி, செஞ்சி மேற்கு ஒன்றிய பொருளாளர் சாரங்கபாணி, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, மற்றும் மணமக்களின் பெற்றோர்கள் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

சென்னை, செப். 5 -

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, தட்டான்குளம், பழைய ஆட்டுத் தொட்டி தெருவிலுள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் 02.09.2025 அன்று நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமைத் தொடங்கி வைத்து, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் அவர்களின் கோரிக்கை கள் குறித்துக் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, பொது மக்களின் குறைகளை அவர்களின் வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஜூலை 15, 2025 முதல் நவம்பர் 2025 வரையிலும் அனைத்து மாவட்டங்களிலும் 10,000 முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் குறித்து 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்.

இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்கிட மருத்துவ முகாமும் நடத்தப்படுகிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று விண்ணப்பத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, தண்டுபத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற 200 அணிகள் பங்கேற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுகள் மற்றும் கோப்பைகளை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர்கள் ஏ.பி.ரமேஸ், பாலசிங், இளங்கோ, சதிஷ் குமார், நவீன் குமார், காயல்பட்டினம் நகர் மன்ற தலைவர் முத்து முகம்மது, நகரச் செயலாளர் வாள் சுடலை, ஆழ்வை சேர்மன் ஜனகர், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், துர்கை நம்மியந்தலில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது விழவில், 1000 பயனாளிகளுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், விஜி (எ) சு.விஜயராஜ், க.சௌந்தரராசன், சு.ராஜாகங்கம், பொன்.கருணாநிதி உட்பட பலர் உள்ளனர்.